Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

22.6.2023

**ஊடக வெளியீடு**

Ir. பத்மநாதன் K.

தலைமை நிர்வாக அதிகாரி

PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

# PBAPP "எஸ்.பி.எஸ் 2023 செயல் திட்டத்தில்" ரிம24.6 மில்லியன் முதலீடு

- **தென் செபராங் பிறை(எஸ்.பி.எஸ்) மாவட்டத்தில் நீர் விநியோக பிரச்சனைகளைத் தீர்க்க "இடைக்கால தீர்வுகளாக" இந்த ஆண்டு(2023) 4 நீர் விநியோக திட்டங்கள் செயல்பாடு காண்கின்றன.**
- **இந்தத் திட்டங்களால் எஸ்.பி.எஸ் மாவட்டத்தில் உள்ள 14,000க்கும் மேற்பட்ட நீர் பயனீட்டாளர்கள் பயனடைவார்கள்.**

பினாங்கு, வியாழன், 22.6.2023 : பினாங்கு மாநில நீர் விரியோக வாரியம் சென் பெர்ஹாட் (PBAPP) இந்த ஆண்டு தென் செபராங் பிறையில்(எஸ்.பி.எஸ்) நீர் விநியோக புகார்களுக்கு "இடைக்கால தீர்வுகளாக" 4 திட்டங்களை செயல்படுத்துகிறது.

PBAPP இன் எஸ்.பி.எஸ் 2023 செயல் திட்டத்தின் (SPS 2023RP) கீழ் பட்டியலிடப்பட்டுள்ள இந்த 4 திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| SPS 2023RP திட்டங்கள் | | முதலீடு (ரிம மில்லியன்) | பயனடையும் எஸ்.பி.எஸ் மாவட்ட பயனீட்டாளர்கள் | நிறைவு |
|---|---|---|---|---|
| 1 | புக்கிட் பஞ்சோர் நீர் சுத்திகரிப்பு | | | ஆகஸ்ட் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆலையின் (WTP) புதிய DAF கிளையில் நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் (MLD) எடுக்கப்படும் | 18.6 | 12,660 | 2023 |
| 2 | சுங்கை கெரியனில் 2.4 MLD “compact WTP” | 4.0 | 1,749 | ஜனவரி 2024 |
| 3 | தாமான் விடுரி மற்றும் தாமான் வெல்லஸ்லி ‘பம்பிங்’ நிலையத்தில் புதிய நீர்ப்பிடிப்பு தொட்டிகள் | 1.2 | 3,495 | அக்டோபர், 2023 |
| 4 | தாமான் சுங்கை டூரி இண்டாவில் இரண்டு “portable” 0.25 MLD திறன் கொண்டது | 0.8 | 162 | ஜூன், 2023 |
| மொத்தம் | | **24.6** | **18,066** | |

எனவே, SPS 2023RP-கான மொத்த முதலீடு சுமார் ரிம24 மில்லியன் ஆகும். நவம்பர் 2022 இல், PBAPP ரிம840,000 பெர்மாத்தாங் திங்கி தற்காலிக பம்பிங் ஆலையின் திட்டத்தை எஸ்.பி.எஸ் மாவட்டத்தில்

உள்ள பல்வேறு பகுதிகளில் நீர் விநியோக சிக்கல்களைத் தீர்ப்பதற்காக நிறைவு செய்தது.

ஜனவரி 2024 இல், எஸ்.பி.எஸ் நீர் பயனீட்டாளர்கள் புகார் அளித்த நீர் விநியோக சிக்கல்களைத் தீர்க்கும் அடிப்படையில் இந்த SPS 2023RP திட்டங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மதிப்பீடு செய்வோம்.

எஸ்.பி.எஸ் நீர் பயனீட்டாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் SPS இல் அதிக இடைக்கால திட்டங்களைச் செயல்படுத்த PBAPP கூடுதலான நிதியை ஒதுக்கீடுச் செய்யும்.

<u>புதிய சுங்கை கெரியன் WTP (கட்டம் 1)</u>

2030 ஆம் ஆண்டு வரை தென் செபராங் பிறையில் அதிக நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக SPS இல் புதிய சுங்கை கெரியான் நீர் சுத்திகரிப்பு ஆலை (கட்டம் 1) நிறுவ PBAPP திட்டமிட்டுள்ளது.

| சுங்கை கெரியான் WTP (கட்டம் 1) | | |
|---|---|---|
| அ. | மூல நீர் வளம் | சுங்கை கெரியான், எஸ்.பி.எஸ் |
| b | நீர் சுத்திகரிப்பு திறன் | 114 MLD |

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

| | | |
|---|---|---|
| c | சேவைப் பகுதி | பிரத்தியேகமாக எஸ்.பி.எஸ்-இல் |
| d | பயனீட்டாளரின் எண்ணிக்கை | 55,000 |
| e | திட்டமிடப்பட்ட முதலீடு | ரிம 171 மில்லியன் (நிலம் கையகப்படுத்துதல் மற்றும் துணை பொறியியல் பணிகள் உட்பட) |

<u>மாநில அரசு சுங்கை கெரியன் WTP திட்டத்தை விரைவுபடுத்த உதவி வழங்குதல்</u>

சுங்கை கெரியன் WTP (கட்டம் 1) நிர்மாணிப்புப் பணிகள் 2027-இல் நிறைவுப்பெற இலக்கு. இருப்பினும், PBAPP பினாங்கு மாநில நிலம் மற்றும் சுரங்க அலுவலகத்தின் (LMO) ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடுகிறது, இதனால் சுங்கை கெரியன் அருகே நிலம் கையகப்படுத்தும் நடைமுறைகளை விரைவுபடுத்துவதோடு, சுங்கை கெரியன் WTP (கட்டம் 1) 2025 அல்லது 2026க்குள் தொடங்கப்படலாம்.

PBAPP சுங்கை கெரியன் WTP (கட்டம் 1) இல் முதலீடு செய்யத் தயாராக உள்ளது. பினாங்கு மாநில அரசு மற்றும் LMO உடன் இணைந்து இந்தத் திட்டத்தை "fast-track" அடிப்படையில் பணியாற்றினால், எஸ்.பி.எஸ்-இல் உள்ள 55,000 நீர் பயனீட்டாளரின் நலனுக்காக PBAPP இந்த புதிய ஆலையை விரைவில் நிர்மாணிக்கும்.

நன்றி.

---

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah

காா்ப்பரேட் தகவல் பிரிவு

மின்னஞ்சல் :syarifah@pba.com.my